# தலையங்கம்

அன்னசத்திரம் ஆயிரம் கட்டல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடியே
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்
- பாரதியார்

ஒரு ஆரம்பப் பள்ளியிலே, நமது குழு சார்பில் உதவிப்பணிகளை மேற்கொண்ட போது ஏற்பட்ட அனுபவங்கள், ஆரம்ப பாடசாலை, கிராமப்புறம், நமது டீம் நிறுவனத்தைப் பற்றி அதிகம் படிக்காத என் சகோதரர் மூலம் அதன் தலைமை ஆசிரியருக்கு விளக்கியும், விளங்காமல் நமது மின்னில்லத்தில் உள்ள தகவல்களை நகலெடுத்து அவர்களுக்கு அனுப்பி விளங்க வைப்பது ஒரு பெரிய காரியமாகத்தான் இருந்தது.

எல்லா விஷயங்களும் விளங்கிய பிறகு, அவர்கள் அளித்த கருத்துக்கள்தான் இப்படி ஒரு கையேடு தயாரிக்கலாம் என்பதற்கு அடிப்படை தூண்டுகோலாக அமைந்தது.

தானம் செய்வது எப்படி இருக்க வேண்டுமென்றால், வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியக்கூடாதாம். ஆனால் நாம் புண்ணியம் சம்பாதிக்கும் எண்ணத்துடன் தானம் செய்கிறோமா? என்னைக் கேட்டால் இல்லை என்றே சொல்வேன்.

நாம் உருவாகி வளர்ந்து வந்த நம் தாய்நாட்டிற்கு, நம்மால் முடிந்த அளவு சிறு அன்புப்பரிசு. அது மட்டும்தான் நம் எண்ணமா? நமது குழு நமது சமுதாயத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது?

என்ன தாக்கம் என்பதற்கு முன் ஏன் தாக்கம் ஏற்படுத்த வேண்டும் என பார்ப்போம். 100 கோடி மக்களைக் கொண்டுள்ள நமது சமுதாயத்திலே 20 சதவிகிதம் மக்களே உயர் மத்தியதர குடும்பங்களையும் உயர்தர குடும்பங்களையும்யும் சேர்ந்தவராய் இருக்கிறார்கள். 80 சதவிகிதம் மக்கள் வறுமைக்கோட்டுக்கு அப்பக்கமும் இப்பக்கமுமாய் ஊசலாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

உதாரணத்துக்காகக் கூடத் தேடித்தேடி ஒரு அன்னை தெரேசா, ஒரு வித்யாசாகர் என்று, ஒன்றிரண்டு என விரல்விட்டு எண்ண வேண்டிய நிலைமையில் நமது நாட்டுச் சேவையாளர்கள் நிலைமை இருக்கிறது. இன்னும் சில சமூக அமைப்புகள் உள்ளன விளம்பரப் பிரியர்களான இவை, செய்வது கொஞ்சம். சொல்வது அதிகம். இதற்கும் மேலாக, வருமானவரிக் கணக்குகளுக்காகவே நடத்தப்படும் சேவை நிறுவனங்களும் உண்டு. எத்தனையோ சேவை நிறுவனங்கள்.. எத்தனையோ சேவைகள்.. இவற்றில் நிலைத்து நின்றவை எவை தெரியுமா? எவை மக்களை அடைந்ததோ அவைதான். சேவை நிறுவனம் மட்டுமல்ல, வியாபார ஸ்தாபனம், அரசியல் கட்சிகள், பள்ளி, கல்லூரிகள் எதுவுமே இதற்கு விதிவிலக்கல்ல.

சிறு முயற்சியென்றாலும் கட்டுக்கோப்பும், திட்டமிடலும் நமது மிகப்பெரிய சொத்துகள். ஒரு பொழுதுபோக்கு போல தொண்டு நிறுவனத்தின் பணிகளில் பங்கு கொள்வதென்பது நமக்குச் சாதாரணமாகத் தோன்றுகிறது.. நிறுவனத்தின் நிழலை விட்டு வெளியே வந்து அமர்ந்து சிந்திக்கும்போது, இன்று நீரோடை போல நமது

செயல்பாடுகள் அமைய வகை செய்த ஆலோசனைகள் எவ்வளவு அபாரமானது. என்று புரிகிறது. சோனி நிறுவனதின் வரலாற்றையும், ஹெவ்லெட் பெக்கார்ட் நிறுவனத்தின் வரலாற்றையும், மைக்ரோஸாஃப்ட் நிறுவனத்தின் வரலாற்றையும் படிக்கின்ற நாம் நாளை நம் நிறுவன வரலாற்றையும் அதன் செயல்பாடுகளையும் ஆயிரம் பேர் வேண்டாம், ஒரு நான்கு பேர் ஆராய வேண்டும் என நாம் ஆசைப்படுவதிலே தப்பு இல்லை.

சிறிது நாட்களுக்கு முன்பு அறிவு விரயத்தை பற்றிய ஒரு புள்ளி விவரம் (Brain drain) மத்திய அமைச்சர் ஒருவர் வெளியிட்ட அறிக்கையைப் படிக்க நேர்ந்தது. ஒரு கணிப்பொறி வல்லுனரை உருவாக்க, அரசு 10 லட்ச ரூபாய் செலவு செய்கிறது. வளரும் நாட்டிற்கு இது மிகப்பெரிய சுமைதான். இந்த சுமையில் கொஞ்சம் நாம் சுமக்கிறோம். இது நமது கடமை.

என்ன தாக்கம் ஏற்படுத்தப் போகிறோம்? நமது ஏப்ரல் மாத கூட்டத்தின் சிறப்பு விருந்தினர் கே. கே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு பாராட்டு கட்டுரை அனுப்பி இருக்கிறார்கள். அதிலே சில வரிகள்.

" நம்நாட்டில் மேற்படிப்பு படித்துவிட்டு மேலைநாடுகளுக்கு பணிக்குச் செல்வோரைப் பற்றிக் கேலியும் கிண்டலும் செய்வாரும் உண்டு. இளைஞர் பலர் அயல்நாட்டிற்குச் சென்று தங்கள் வசதிகளையும் வாய்ப்புகளையும் பெருக்கிக்கொண்டு உல்லாசமான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்களுக்கு நாட்டுப்பற்று என்ற ஒன்று இல்லை. பிறந்த பொன்னாட்டையே மறந்து விடுகின்றனர். தன்னல நோக்கோடு செயல்படுகிறார்கள். மற்றவர்களை மதிப்பதில்லை. அலட்சியப்படுத்துகிறார்கள் எனப் பழிச்சொல் கூறுவோரும் நம் நாட்டில் உண்டு. ஆனால் அதைப்பற்றி கவலைப்படாமல் "போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரித் தூற்றுவோர் தூற்றட்டும்", "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற உயரிய நோக்கோடும் கொள்கையோடும் திறந்த நல்ல மனதுடன் இத்தகு அரிய சிறப்பான கல்வி நற்பணி செய்து வரும் தமிழன்பர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்"

இதிலே ஒரு பாராட்டுடன், நம் நாட்டிலே நம்மை பற்றி மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை நாசுக்காய் தொட்டுக்காட்டி இருக்கிறார்.

நம்முடன் ஒருநாள் பழகியதாலே, ஒரு தனிமனிதனுக்கு அடுத்த தலைமுறை மீது இப்படி ஒரு நம்பிக்கை வருமெனில், நமது இக்கையேடு மூலம் எத்தனை பெரியவர்கள் மற்றும் குழந்தைகள் மனதிலே ஒரு பிடிப்பினை ஏற்படும் என எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் கொடுக்கும் சிறிய கொடையை விட இந்த நம்பிக்கை மிக முக்கியம். யாரோ புண்ணியவான்கள் என்ற பெயரை விட, நமது இளைஞர்கள் என்ற பெயரை எடுக்க வேண்டும். நாம் கொடுக்கும் கொடை பெரியதல்ல. வருங்கால சந்ததிக்கு நாம் காட்டும் வழி முக்கியம்.

ஒரு நடிகர் ரத்ததானம் செய்கிறார் என்று ஆயிரம் ரசிகர்கள் ரத்ததானம் செய்கின்றனர். நாளை நம்மையும் சிலர் உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம். இது போல் இன்னொரு குழு நமது பாதையை தேர்ந்தெடுக்கலாம். நமது அலுவலகத்தில் பணி செய்யும்பொழுது ஒரு நல்ல பழக்கத்தை கற்று இருக்கிறோம். எது செய்தாலும் எழுதி வைப்பது. நாளை இன்னொரு விதத்தில் அது கைகொடுக்கும்.

ஏதோ தானம் செய்வது நமது நோக்கமல்ல. அடிப்படைக் கல்வி வசதி சீர்திருத்தப்பட வேண்டும் என்பது நமது கொள்கை. 400 கைகள் அதற்கு போதாது. நமது இந்த சிந்தனை நமது மக்களுக்கு சென்று சேரவேண்டுமெனில் ஒரு கையேடு தேவை. சிந்தனைகள் மக்களை சேரும்போதுதான் சீர்திருத்தங்கள் நடைபெறுகின்றன. அரசாங்கம் கவனிக்கவில்லையே என்று ஓராசிரியர் பள்ளியிலே ஓய்ந்து கிடக்கும் ஒரு ஜீவனுக்கு இது நம்பிக்கை தரும்.

இக்கையேட்டின் ஒரு பிரதியை ஒரு சாதரண குடிமகன் படித்தாலே ஒரு சிறு தாக்கம் ஏற்படும் என்பது என் நம்பிக்கை. பரீட்சித்துதான் பார்ப்போமே!

- தாமரை செல்வன்

## தானமும் தர்மமும்

தனக்கு மிஞ்சியதுதான் தானமும் தர்மமும் என்பார்கள்.

நம் எல்லோருக்கும் தெரிந்த பழமொழியிது.. இதன் அர்த்தம் பல இடங்களிலே அனர்த்தமாகத்தான் உபயோகப்படுத்தப்படுகிறது..

தனக்கு என பொருளைச் சேர்த்துக்கொள். பிறகு மற்றவரைப் பார்க்கலாம் என்கின்றனர் சிலர்.

வெள்ள நிவாரணம், பூகம்ப நிவாரணம் என வசூல் செய்து, தனக்கு வேண்டிய அளவு எடுத்துக்கொண்டு, மிஞ்சியதை தானம் செய்வர் சிலர்.

எல்லோருக்குமே இது ஒருவகையில் உபயோகமாய் போய்விட்டது. ஆனால் இதன் உண்மையான பொருள்தான் என்ன?

நம்மிடம் இருப்பது எல்லாமே நம்முடையது அல்ல. நாம் நம் உழைப்பினால் சம்பாதித்தது கூட முழுமையாய் நமக்கு சொந்தம் அல்ல.

நமக்கென பல கடமைகள் உள்ளன. நம்மைச் சார்ந்தவர் பலர் இருக்கின்றனர். மனைவி, மக்கள் உறவினர் எனப் பலர் இருக்கின்றனர். அவர்களின் நலம் பேணுதல் நம் முதற்கடமை.

சமுதாயம் ஒரு கடமை. அதற்காய் நம் வருமானத்தில் ஒரு பங்கை வரியாய் செலுத்துகிறோம்.

இப்படி நமக்கென உள்ள கடமைகளச் செய்த பிறகு நமக்கென சிறிது எஞ்சியிருக்கும். அதுதான் தனக்கு மிஞ்சியது. அதைத்தான் கொடுக்க வேண்டும். பிறர் செல்வத்தை அல்ல.

அந்த தானம்தான் தர்மம். மற்ற தானமெல்லாம் அதர்மம்.

தனக்கு மிஞ்சியதையே தானம். அதுவே தர்மம்.

## மீண்டும் ஒரு கண்ணோட்டம்

*பெற்றோரின் அரவணைப்பு, பள்ளி, கல்லூரி, அலுவலக வாழ்க்கை என்று தொடர்கிறது ஒரு குழந்தையாய் ஆரம்பித்த நமது வாழ்க்கை பயணம். குறும்புக் குழந்தை பொறுப்பற்ற வாலிபனாக வளர்ந்து, சுயமாய் சம்பாதிக்க ஆரம்பித்த பின், ஒரு காலகட்டத்தில் தனிமனித வாழ்க்கையின் திருப்புமுனையாய் திருமணம். எல்லோருக்கும் எதாவது ஒரு வகையில் அது ஒரு திருப்புமுனைதான். ஒருவகையில் புயல். அந்த புயலில் சிக்கிய அனைவரும் பொறுப்பானவர்கள் எனப் பெயரெடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறோம். நம் எண்ணங்களின் வளர்ச்சியாய் நாம் செயல்களுக்கு காரண காரியங்களை அலசி செயல்பட ஆரம்பிக்கிறோம்.*

*இப்படி சிந்திப்பவர்களில் பலர், தனிப்பட்ட வாழ்க்கையை சிந்திக்க ஆரம்பிக்கிறார்கள். ஒரு தனிமனிதனின் வாழ்க்கை அவன் மற்றும் அவன் குடும்பம் மட்டும்தானா? 80% மனிதர்கள் தான், தன்குடும்பம் என நினைத்து பொருளீட்டி (எத்தனை பேர் அனுபவிக்கிறார்கள்?) மடிந்து விடுகிறார்கள். அவன் வாழ்ந்த சமுதாயம், அதைப்பற்றி யார் நினைப்பது? ஒவ்வொருவரும் அவரவர் வாழ்க்கை என வாழ்ந்து விட்டிருந்தால், அம்பேத்கார் பாரதத்திற்கான அரசியல் அமைப்பை எழுதி இருக்க முடியுமா? கார்ல் மார்க்ஸ் ''பொதுவுடமை'' எழுதாமல் இருந்திருந்தால், ''முதலாளித்துவத்துக்கு'' போட்டி எழுந்து இருக்குமா? நல்லதோ கெட்டதோ, போட்டியில்லாத எதுவும் ஆரோக்கியமானதாக இருக்க முடியாது.*

*எப்படி என் வாழ்க்கை, என் மனைவி, என் குழந்தை, என் பெற்றோர்கள் முக்கியமோ, அதுபோலத்தான் நம் அண்டை வீட்டு மனிதனின் வாழ்க்கையும். நம் அண்டை வீடு செழிக்க வேண்டாமா? சற்று முற்போக்காய் சிந்தித்தால் நம் நண்பன், நம் தமிழன், நம் இந்தியன் தலை நிமிர வேண்டாமா?*

*ஒரு இளைஞன் தாயகத்துக்கு கிளம்புகிறான். அருகில் உள்ள இருக்கையில் உள்ளவர் கேட்டால், இந்தியா செல்கிறேன் என்கிறான். நெருங்க நெருங்க தன் மாநிலம் தன் ஊர், தன் தெரு, தன் வீடு என குறுகிக்கொண்டே போகும் அவன் எண்ணம், மேலே பறந்தபோது நாடு என விரிந்தது போல், நம் எண்ணங்கள் குடும்பம் என்ற குறுகிய எண்ணத்தை விட்டு மேலே வரும்போது நமது சமுதாயம் நம் நாடு என்ற உணர்வு வெளிப்படுகிறது.*

*பொறுப்பானவர்களாய் பரிணாம வளர்ச்சி அடையும் நாம் எந்த செயலையும் ஏன்? எப்படி? எதற்கு? என்ன? என்று ஆராய்ந்தே செய்கிறோம். அதே கேள்விகளுக்கு நமது அமைப்பு என்ன பதில் தருகிறது?*

*ஏன்*

*உடல் உறுதி பெற உடற்பயிற்சி செய்கிறோம். உடற்பயிற்சியின் நலன்கள் அனைவருக்குமே தெரியும். அதுபோல் மனம் உறுதி பெற நல்ல எண்ணங்கள் வேண்டும். நல்லவற்றை நினைத்தல், செய்தல் ஆகியவை மனம் வலிவுபெற உதவுகிறது. காலையிலோ மாலையிலோ செய்யும் வாக்கிங் எப்படி உடல்நலத்திற்கு உதவுகிறதோ, அதுபோல் நல்ல செயல்களுக்கு சிறிய அளவிலாவது நம் நேரத்தை செலவிடுவதிலே*

மனம் உறுதிப்படுகிறது. நாலு பேருடன் அதை சேர்ந்து செய்யும் போது, நட்புணர்வும், மகிழ்ச்சியும் உண்டாகிறது.

நம்மில் பலர் மேலே கூறியபடி குடும்பச்சுமையினாலே நல்ல எண்ணங்கள் இருந்தும் செயல்களாய் அவற்றை மாற்ற முடியாமல் விட்டுவிடுகிறோம். ஒரு மணி நேரத்திற்கு உடற்பயிற்சி செய்யாவிட்டாலும் பத்து நிமிடம் நடைப்பயிற்சி செய்வதுபோல், சில மணித்துளிகளை செலவிடுதல் மூலமாய் ஒரு நற்செயல் செய்யமுடியுமெனில் செய்ய பலர் தயாராகவே இருக்கிறோம். அடிப்படையாய் ஒரு திட்டம், ஒரு அமைப்பு செயல்பட முடியுமென்றால், அதற்கு பலம் சேர்க்க பல கரங்கள் தயாராய் உள்ளன. அவர்களுக்கு ஒரு நல்ல அடிப்படை அமைக்க வேண்டும் என்னும் நோக்கமே டீம் உருவானதின் முக்கிய நோக்கம்.

என்ன?

Team for Educational Activities in Motherland ( தாயகக் கல்வியுதவி செயல்பாட்டுக் குழு) நமது தாயகத்தில் கல்வி மேம்பாட்டிற்கான உதவிகளைச் செய்வதை அடிப்படையாக கொண்ட ஒரு அமைப்பு.

நமது தாயகத்திலே இருக்கும் பல்லாயிரக்கணக்கான அடிப்படை வசதிகளற்ற பள்ளிகளில் அடிப்படை வசதிகளை செய்து தருவதன் மூலம், ஆசிரியர்கள் மாணாக்கர்களுக்கு உற்சாகமூட்டி, கிராமப் புறங்களிலே நல்ல கல்வி கிடைப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே இதன் நோக்கம்.

யாருக்கு?

சமூகத்திலே எத்தனையோ நற்பணிகள் தேவைப்படுகின்றன. ஒவ்வொரு பொதுத்தொண்டு நிறுவனமும் ஒரு பகுதியை நோக்கியே செயல்படுகிறது.. மருத்துவம், குழந்தையர் நலம், மகளிர் நலம், முதியோர் நலம் என்று பலதரப்பட்ட மக்களில் டீம் ஏழைக்குழந்தைகளின் நலத்தை தன் முக்கியக் குறிக்கோளாய் கொண்டது. அதிலும் அவர்களின் கல்வியை முக்கியக் கோட்பாடாய் கொள்ளக் காரணம், நல்ல கல்வி, நல்ல குடிமக்களை உருவாக்கும் என்ற கருத்தில் கொண்ட நம்பிக்கைதான். இன்று நம் உறுப்பினர்கள் நல்ல வாழ்க்கை அடைய முடிந்தது என்றால், அதற்கு காரணம் கல்விதான். அந்தக் கல்வி அமைப்பு இன்று பலவிதங்களிலும் சேதப்பட்டு கிடக்கிறது. பல தனியார் பள்ளிகள் முளைத்து, பணத்திற்குக் கல்வி என்று வியாபாரம் செய்து கொண்டு இருக்கின்றன. மற்றொரு புறம் பல கிராமப்புற அரசுப்பள்ளிகளும், எளிய பள்ளிகளும் மூச்சுத் திணறி வருகின்றன.

கூரையில்லாப் பள்ளிக்கும், மரத்தடிப் பள்ளிக்கும் குழந்தைகளை அனுப்பி வைக்கும் ஏழைகள். பள்ளியின் தேவைகளை அரசுக்கும் மக்களுக்கும் தெரியப்படுத்தி உதவிக்காக போராடும் நல்லாசிரியர்கள். இது போன்ற பள்ளிகளில்தான் நம்மில் பலரின் ஆரம்பக் கல்வி நடந்திருக்கிறது. இதனாலேயே இன்று பல கிராமப்பள்ளிகளிலே ஆசிரியர்கள் ஊக்கம் குறைந்தவர்களாய் மாறி வர, பள்ளியில் பலப்பம் பிடிக்க வேண்டிய பல கைகள் தொழிற்சாலையில் வாடிக்கொண்டு இருக்கின்றன. திண்ணைப் பள்ளிகளிலும், தெருவிளக்கடியிலும், பல அப்துல் கலாம்களும், சர்.சி.வி. ராமன்களும், ஜகதீஸ் சந்திர போஸ்களும் உருவாகினர். அத்தகைய அறிஞர்களை உருவாக்கிய ஆசிரிய சமுதாயம் இன்று உற்சாகம் குன்றி இருக்கின்றது.

நம்மில் பலர், கிராமத்தில் உள்ள தமது ஆரம்பப் பாடசாலையை கண்டு மனம் வெதும்பி இருக்கிறோம். அந்த பள்ளிகளுக்குச் சிறிது உதவி செய்வதின் மூலம் ஆசிரியர்கள் மாணவர்கள் மனதிலே உற்சாகத்தை ஊட்டி, கல்வித்தரத்தை உயர்த்தலாம் என அறிவோம்.

குழந்தைத் தொழிலாளிகள் உருவாக கல்வியின்மை அடிப்படை காரணம் என புள்ளிவிவரக் கணக்குகள் சுட்டிக் காட்டுகின்றன. உழவோ, நெசவோ, தொழில் எதுவானாலும், கல்வி முன்னேற்றத்தைப் பெருக்கும். ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது, அங்கு உள்ள மக்கள் பெறும் கல்வியின் தரத்தை பொறுத்தது. கல்வியின் தரம் உயர கல்விச்சாலைகள் மேம்படவேண்டும்.

ஒரு சில நல்ல பள்ளிகள் இருப்பதால் நாடு உயர்ந்து விடாது. அனைத்துப் பள்ளிகளும் குறிப்பிட்ட அளவு தரத்தை எட்ட வேண்டும்.

அதுமட்டுமல்ல, விழாக்காலங்களிலே நன்கொடை வசூலிப்பவர்களை கவனித்து இருப்பீர்கள். முதலில் ஒரு நன்கொடையாளரிடம் பெரிய தொகையை எழுதி ரசீது போடுவார்கள். அதை அளவாக கொண்டு பலரும் தமக்கு இயன்ற அளவு நன்கொடை அளிப்பர். அதுபோல் ஒரு கிராமத்திலே வெளிநாட்டில் இருக்கும் ஒருவன் ஒரு நல்ல காரியம் செய்யும் பொழுது, அது தெரிந்தபின் பள்ளிகளையே மறந்த சிலர் சிறுசிறு நற்செயல்கள் செய்யலாம்.

நம் நாட்டு பள்ளிகளை எல்லாம் ஒரு குறிப்பிட்ட தரத்துக்கு உயர்த்துவது என்பது மிகப்பெரிய காரியம். காரியத்தின் பரிமாணத்தைக் கண்டு மயங்காமல் முடிந்தவரை செய்வோம் என்று கடமையைச் செய்தல் வேண்டும். எதற்குமே ஒரு தொடக்கம் உண்டு. திட்டங்கள் ஒவ்வொன்றாய் நிறைவேற ஆரம்பித்து மக்களின் நம்பிக்கையை பெறும்பொழுது, இதன் வளர்ச்சி நமது நாட்டிற்கே ஒரு திருப்பு முனையாய் வளரும்.

## டீம் தோற்றம்

அமெரிக்காவிலே நண்பர்களைச் சந்திக்கும் பொழுதெல்லாம் மன்மோஹன் சிங்கையோ அப்துல் கலாமை பற்றியோ என்றாவது ஒருநாள் தான் பேசுகிறோம். மற்ற சில பேர்களைப் பற்றி எப்பொழுதும் பேசுகிறோம், அடுத்தவர்கள் கடமை தவறுவதை திட்டித்திட்டியே பல பேர் பொழுதைக் கழித்துக் கொண்டிருக்கிறோம். இந்த படுகுழியிலிருந்து மீள ஒரேவழி ஆக்கப்பூர்வமாய் எதாவது செய்ய வேண்டும். இப்படி எங்கேயோ வெளிப்பட்ட ஒரு பொறி, டீம் என்ற ஒரு அமைப்பாக ஒரு தீபமாய் ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

கி.பி.2000 வருடம் ஏப்ரல் மாதம் மனதிலே அரும்பி, தொலைபேசியிலும், மின்னஞ்சலிலும் விவாதத்தில் வளர்ந்து, எதையாவது செய்ய வேண்டும் என்ற கருத்துக்கு விதையிடப்பட்டது. இதன் கருத்து எளிமைதான்.

மாதம் ஒரு குறுந்தொகை.. உறுப்பினர் செலுத்துவர்.. மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பொதுக்கூட்டம். இதுவெல்லாம் சாதாரண விஷயங்கள்தானே என்று நினைக்கத்தோன்றுகிறதா? இருக்கலாம். ஆனால் எந்த நதியும் உற்பத்தி ஆகும் போது சிற்றோடைதான். ஓடைகள் இணைய அருவியாய், நதியாய் வளர்கிறது.

## டீம் செயல்முறைகள்

பொதுக்கூட்டத்திலே சீட்டு குலுக்கப்பட்டு உதவிச் செயல் செய்பவர்களின் பெயர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணம் சமமாய் பிரித்துத் தரப்படும். இனி அவர்கள் தங்களுடைய பகுதியிலே ஒரு உதவி தேவைப்படும் பள்ளிக்கு அதன் தேவைகளை அறிந்து வசதிகள் செய்து தர வேண்டும்.

உதாரணமாக 100 பேர். 10 டாலர் ஆளுக்கு. 3 மாதம். 3000, டாலர். 6 பேர் தெர்ந்தெடுக்கப்பட்டு 500 டாலர் மூலம் பிரித்துக் கொடுத்து, 6 பள்ளிகள் பயனடைந்தன. 50 மாதங்களில் ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு நற்செயல் புரிந்திருப்பார்கள்.

அப்படியானால் கூட்டம்? அதற்கும் ஒரு எளிமையான திட்டம். கூட்டத்திற்கு ஆகும் செலவு உண்டியல் வசூல் மூலம் சமாளிக்கப்படுகிறது.

உணவு? அமெரிக்கர்களிடம் இருந்து நாம் மீட்டெடுத்த நமது நற்பண்புகளில் ஒன்று பாட்லக். சித்திரை மாதம் பௌர்ணமி நிலவில், வைகைக்கரையில் சுற்றமும் நட்பும் சூழ நிலாச்சோறு சாப்பிட்ட அதே பண்பாடுதான் பாட்லக். வருபவர் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு பதார்த்தம் செய்து வருதல். என்ன தேவை என்பதை நிர்வாகிகள் திட்டமிட, அன்புடன் சமைக்கப்பட்ட உணவு பகிர்ந்து உண்ணப்படுகிறது.

மற்றபடி, உறுப்பினர்களின் விருப்பத்திற்கும், கூட்டம் நடக்கும் இடத்திற்கும் ஏற்ப சில பொழுது போக்கு அம்சங்களும் உண்டு.

மற்ற தொண்டு நிறுவனங்களுக்கும் டீமுக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசம், டீமில் அனைவரும் சமம். அனைவரும் அவருக்கு பிடித்த ஒரு நற்பணியை செய்யலாம். அனைவருக்கும் திட்ட அமலாக்கத்தில் உரிமை. இதற்கும் மேலாய் ஒன்று இருக்கிறது.

நம்மில் பலர் நன்கொடை கொடுத்தபின், அந்தப்பணம் உரியவருக்கு போய் சேர்ந்ததா என்று எண்ணி வருத்தமடைபவர்கள். பல நற்பணி அமைப்புகளில் மொத்த நிர்வாகசெலவு என்பதே ஒரு பெரும்தொகையாய் அமைந்து விடுகிறது. டீமில் உறுப்பினர்கள் தமது முழுச்சந்தாவையும், தம் மனதிற்கேற்ற வகையிலே செலவிட முடிகிறது.

உறுப்பினர்கள் அமெரிக்காவில் இருக்க, திட்டபணிகளோ இந்தியாவில். இதற்கும் நம் கலாச்சாரம்தான் கைகொடுக்கிறது. உறுப்பினர்கள் திட்டங்களை, இந்தியாவில் உள்ள தத்தமது குடும்பப் பெரியவர்கள் மூலம் செயல்படுத்துகிறார்கள். இதனால், குடும்பத்தினருக்கு மதிப்பும், மன மகிழ்ச்சியும் கிடைக்கிறது. பல பெற்றோர்களுக்குத் தன் குழந்தை, தன்மூலம் நற்செயல் செய்கிறார் என்பது எவ்வளவு இன்பத்தை அளிக்கும் என்பது நம் அனைவருக்குமே தெரியும்.

### டீம் விதிமுறைகள்

- எந்த பள்ளி பயனடைய வேண்டும் என்பதை உறுப்பினரே தேர்ந்தெடுப்பார்.
- எவ்வகை உதவி தேவை என்பதை ஆராய்ந்து உறுப்பினரே முடிவெடுத்து திட்டத்தை நிறைவேற்றுவார்.

- டீம் குழுப்பணியில் நம்பிக்கை கொண்டது
- டீம் அனைவருக்கும் சம உரிமை அளிக்கும். யாருக்கும் அதிக அதிகாரமோ உரிமையோ கிடையாது.

டீம் இதுவரை

நிர்வாகிகள் வழிநடத்தல்கள் மட்டுமே பணியாய் கொள்ளாமல் ஆர்வலர்கள் மூலமாய் மின்னில்லம், திட்ட ஆவணங்கள் சேகரித்தல் என ஒவ்வொரு பகுதியாய் எடுத்து செய்கின்றனர்.

100 இளைஞர்களின் கரங்களால் ஏற்றப்பட்ட இந்த தீபம் இன்று ஏழைக்குழந்தைகளுக்கு கல்விக்கண் திறக்க பாடுபட்டுக்கொண்டிருக்கிறது. இந்த வெற்றியின் மூலம் டீமின் பலம் இருமடங்கினும் மேலாய் உறுப்பினரை கொண்டு எளிமையாய் இயங்கி வருகிறது. இன்று நமது அமைப்பு, வரிவிலக்கு பெற்று ஒரு பொதுத்தொண்டு நிறுவனமாய் பதிவு செய்யப்பட்டு, இது வரை 50 பள்ளிகளுக்கான நிதி ஒதுக்கீடு நடந்து, அவற்றிலே 20 திட்டங்கள் முடிக்கப்பட்டு, மற்றவை முடிவடையும் தறுவாயிலும் இருக்கின்றன.

டீம் ஒரு குழந்தையாய் தளிர் நடை போட்டுக்கொண்டு இருக்கிறது. ஒரு கல்விப்பணி தடங்கலில்லாமல் நீரோட்டம் போல நடைபெறத் தேவையான அளவிற்கு முன்கூட்டியே சிந்தித்ததனால் இன்று உறுப்பினர்களிடையே அடுத்து என்ன என்ற அளவிற்கு ஒரு சிந்தனை வளர்ந்து வருகிறது.

டீம் வளர அதை மக்கள் உணரவேண்டும். அதன் நோக்கங்களும் செயல்பாடுகளும் மக்களை அடைய வேண்டும். அடையும் என்று நம்புவோம்.

## சமுதாயத்திலிருந்து சமுதாயத்திற்கு

இலனென்னும் யெவ்வம் உரையாமை ஈதல்
குலமுடையான் கண்ணே உள.

கொடுத்தல் என்பது எளிது. அதை எப்படி கொடுக்க வேண்டும் எனக்கூறுகிறது இக்குறள்.

எவ்வம் - துன்பம். இல்லாதவன் என்னும் துன்பம். அதைச் சொல்லாமல் கொடுக்க வேண்டுமாம். எப்படி? இல்லாதவன் என்ற சொல்லே எழக்கூடாது. குசேலன் முகம் கண்டு அவனுக்கு தெரியாமலேயே கொடுத்தானே கண்ணன். அதுவா?

குசேலனுக்கு தான் இல்லாதவன்.. . கண்ணனிடம் பொருள் கேட்டுப்போகிறோமே என்றோர் மனக் கலக்கம். கேட்கத்தயக்கம். இல்லாமை என்பதினால் வந்த துன்பம். அந்த துன்பத்தை உரைக்கும் முன்னே கொடுத்தான் கண்ணன்.

இந்தக் குறளுக்கு இன்னும் சில விளக்கங்கள் உண்டு.

இலன் என்ற சொல் யாசிப்பவன் மட்டுமல்ல. சில சமயங்களில் கொடுப்பவனும் சொல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. கேட்ட பொருள் இல்லையென்றால் என்ன செய்வது?

கொடுக்கும்போது ஒருவனுக்கு மகிழ்ச்சி உண்டாகுமா? பெயருக்கு(காக) கொடுப்பவனுக்கு மகிழ்ச்சி உண்டாகத்தான் செய்யும். கேட்கின்ற நிலமையிலே மக்கள் இருக்கின்றார்களே என நினைப்பவனுக்கு மகிழ்ச்சி வராது. வேதனைதான் வரும்.

துன்பத்தைத் தரக்கூடிய அந்த இல்லை என்ற சொல்லை எப்படி இல்லாமல் செய்வது? தனிமனிதனுக்குக் கொடுப்பதை நிறுத்தி சமுதாயத்துக்கு கொடு. எங்கிருந்து உனக்கு எல்லாம் வந்ததோ அங்கேயே திருப்பிக்கொடு. அப்போது இல்லை என்ற சொல் எழாது.

இரப்போர்க்கு ஈதலிலும் இரந்துண்டு வாழ்வதிலும்
இன்பம் உண்டாவதில்லை என்தோழா
அரியகைத் தொழில்செய்து அனைவரும் பகிர்ந்துண்டு
அன்புடன் வாழ்வதின்பம் என்தோழா

காலம் முழுதும் கால்நடையாய், தோளில் சுமந்து ஆற்றை கடக்க செய்வதை விட ஒரு பாலம் கட்டு. சமுதாயத்தின் எந்தப் பகுதி உயர்த்திக் கொள்ள உதவியதோ அதை நீ உயர்த்து.

இதனால்தான் நம் குழு, தான் ஏறி வந்த கல்விப்படிகளை பலமாக்க முயல்கிறது இல்லையா?

# டீம் - ஒரு ஆராய்ச்சிப்பார்வை

இது நமது நிறுவனத்தைப் பற்றியல்ல. பொதுவான ஒரு கண்ணோட்டம். பிரபஞ்சத்தில் தனியே எதுவும் செயல்படுவதில்லை. கிரகங்களின் கூட்டணி சூரிய மண்டலம். நட்சத்திரங்களின் கூட்டணி கேலக்ஸி என பெரிய அளவிலும் சொல்லலாம். செல்களின் கூட்டணி நம் உடல் என நுணுக்கமாகவும் சொல்லலாம். ஒரு டீம் என்பது ஒரு பொதுனோக்குடன் செயல்படும் ஒரு குழு.

குழுக்கள் பல இருந்தாலும் பல குழுக்கள் தோல்விப்பாதையில் செல்கின்றன. சில குழுக்கள் வெற்றிப்பாதையில் செல்கின்றன. வெற்றிக்கு காரணங்களில் உழைப்பு முக்கியப்பங்கு வகித்தாலும், அதன் பங்கு 34 சதவிகிதம் மட்டுமே. திட்டமிடலும், TEAM SPIRIT எனப்படும் குழு முன்னேற்ற உணர்ச்சியும் 65 சதவிகிதம் வெற்றிக்கு காரணமாக அமைகின்றன. மீதி ஒரு சதவிகிதம் அதிர்ஷ்டம் எனக் கொள்ளலாம்.

## திட்டமிடல்

எந்த ஒரு குழுவாக இருந்தாலும் திட்டமிடல் என்பது மிகப்பெரிய முன்முயற்சி ஆகும். எதற்காக குழு அமைக்கப்படுகிறது என்பதை பொறுத்து குழுவின் அமைப்புகள் மாறுபடும். சில வகைகளை இங்கு காண்போம். எடுத்துக்காட்டுக்காக நமக்கு பழகிய அணிகளை எடுத்துக்கொள்வோம்

## ரிலே டீம் (தொடர் ஓட்டம்)

ஒரே ஒரு குறிப்பிட்ட நோக்கிற்காக அல்லும் பகலும் பாடுபட வேண்டுமெனில் இத்தகைய டீம் அமைக்கப்படுகிறது. அத்துறையிலே தலைசிறந்தவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். 4 X 100 மீட்டர் ஓட்டப்பந்தயம் போல. ஒவ்வொருவரும் தம்மால் முடிந்தவரை ஓடி தமது குறிக்கோளை அடைந்தவுடன் அடுத்தவரிடம் தமத் காரியத்தை ஒப்படைக்கின்றனர். கப்பல் இயந்திரப் பொறியாளர்கள், போன்றவர்களின் பணியை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

கப்பலில் பொறியாளர்கள் 4 மணி நேர வேலை, நான்கு மணி நேர ஓய்வு என முறை வைத்து இயந்திரங்களை கண்காணிக்கின்றனர். பணியாளர்கள் குறைவு. பணியோ அதிகம். எனவே ஒவ்வொருவரும் திறமைசாலியாக இருக்க வேண்டும். இவர் கப்ளிங் எக்ஸ்பர்ட், இவர் ஜெனரேட்டர் எக்ஸ்பர்ட், இவர் பைப்பிங் எக்ஸ்பர்ட் என பிரிக்க முடியாது. நாலு மணி நேரமும் கவனமாய் செய்ய வேண்டும். ஒரே ஒரு ரேடியோ எஞ்ஜினியர் தான் பணியில் இருப்பார்.

இவ்வகைப் பணியில் கடமையே கண்ணான உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். ஒவ்வொருவரும் தனித்தனியாய் பணிசெய்தாலும் ஒருவரின் தோல்வி, அனைவரின் தோல்வி.

## கிரிக்கெட் டீம்

ஒரு காரியத்திற்காக பல்வேறு திறன்கொண்ட உறுப்பினர்களை ஒருங்கிணைத்து, ஒரு அமைக்கப்படும் இந்த வகை டீம்களில் ஒவ்வொருவருக்கும் ஒருவகை இலக்கு உண்டு. முதல்வகை டீம் போல அல்லாமல் இதில் ஒருவர் மற்றவருக்கு அதிகம் உதவ முடியாது.

முதல் டீமைப்போல இதில் வெற்றிக்கு யார் முக்கிய காரணம் என கண்டுபிடித்தல் கடினமான காரியம். வெற்றிபெற்றால் யார் காரணம் என்று மார்தட்டிகொள்பவர் நிறையவே உண்டு. தோல்வி என்றால் ஒவ்வொருவரும் அடுத்தவரையே சுட்டிக் காட்டுவர். மலை ஏறும் குழு, விண்வெளிப்பயணக்குழு, தொழில்கூட குழுக்கள் இதில் அடங்கும்.

டக் ஆஃப் வார் டீம் (கயிறு இழுக்கும் அணி)

இது ஒரு கூட்டு முயற்சி டீம். இதில் வெற்றியில் யார் பங்கு அதிகம் யார் பங்கு குறைவு என எடைபோட முடியாத நிலை. கயிற்றுமுனையில் தன் இடுப்பை கட்டிக்கொண்டு நங்கூரமாய் (Anchor) ஒருவர் இருப்பார். (ஒரு கட்சித்தலைவன் போல) அனைவரும் தங்களால் இயன்ற முயற்சியை அளிப்பர். ரிலே டீம் வகைக்கும் இந்த வகை டீமுக்கும் உள்ள மிகப்பெரிய வித்தியாசம், ரிலே டீமில் அனைவரின் பங்கும் தனித்தனியே அமைந்தது. இதிலே அனைவர் முயற்சியும் ஒரே சமயத்திலே. இதில் தனிமனித தோல்விக்கு வழியில்லை. குடும்பங்கள், இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இந்த வகையில் அடங்கும்.

வகை எதுவாய் இருந்தாலென்ன? அடிப்படையில் ஒவ்வொரு உறுப்பினரும் தன்னுடைய முழுத்திறமையையும் ஒரு டீமின் வெற்றிக்கு உதவியாக வெளிப்படுத்த வேண்டும். இது மட்டுமா? இன்னும் சில குணநலங்களும் டீமின் வெற்றிக்கு உதவுகின்றன.

அவற்றில் மிக இன்றியமையாதன அன்பு, விடாமுயற்சி, காலம் தவறாமை, பொறுமை, சகிப்பு தன்மை, திறமையாகப் பேசும் கலை, நாட்டு நடப்பு, வெளி விவகாரங்களைப் பற்றிய பொது அறிவு, எதையும் சமாளிக்கக் கூடிய கெட்டிக்காரத்தனம், சுயபுத்தி, மற்றவர்களிடம் தாராளமாகவும் சுமுகமாகவும் பழகும்தன்மை, அதேசமயம் மற்றவர்களால் ஏமாற்றப்படாமல் தன்னைத்தானே காத்துக்கொள்ளும் தன்மை, இன்னும் பிற பண்புகளாகும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இருக்க வேண்டிய மிகமிக இன்றியமையாத ஒன்று, நம்பிக்கை என்னும் ஒளி, செலுகின்ற இடத்தில் வெற்றி நமதே என்ற திண்ணிய எண்ணம். இதற்கும் மேலானது நன்கு திட்டமிடக் கூடிய சாமர்த்தியம். தீட்டிய திட்டத்தின்படி செயலாற்றும் கடமையுணர்ச்சியுடனும் கட்டுப்பாட்டுடனும் கூடிய ஆற்றல்.

நம்பிக்கை என்றால் சுயநம்பிக்கை மட்டும் அல்ல. மற்றவர்களிடம் கொள்ளும் நம்பிக்கையும்தான். தன் தோழர்களிடம் நம்பிக்கை இல்லாதான் தன்னையே நம்பாதவனுக்குச் சமம். அதே சமயம் தன் தோழனுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்பவன் மனிதனே அல்ல.

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிமிடமும் எதாவது ஒரு டீமின் உறுப்பினராகத்தான் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். குடும்பம் ஒரு டீம். சமூகம் ஒரு டீம். தனிமனிதன் கூட உணர்வும் அறிவும் இணைந்த ஒரு டீம்தான், உடலும் பல உறுப்புகள் இணைந்த ஒரு டீம்தான்.

நல்லெண்ணமும் விடாமுயற்சியும் உயர்நோக்கும் உடைய டீமில் பங்கெடுத்தல் என்பது வாழ்விற்கு அர்த்தத்தை கொடுக்க கூடியதாகும். முயன்றுதான் பார்ப்போமே.

# அமெரிக்கா வாழ் அன்புத் தமிழர்களின் அறப்பணி

பேராசிரியர் டாக்டர் கே. கே. கிருஷ்ணமூர்த்தி
முன்னாள் முதல்வர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.
கோயம்புத்தூர்.

## கல்வியின் சிறப்பு:

கல்வியின் இன்றியமையாமைபற்றியும், உயர்வு, மேன்மை, நன்மை, வன்மை ஆகியவற்றைப் பற்றியும் நம்முடைய இதிகாச புராணங்களிலும், இலக்கண இலக்கியங்களிலும், முதறிஞர்கள், புலவர்கள், அறிவியலார் ஆகியோர் மிகத் தெளிவாகவும், விளக்கமாகவும் எடுத்துரைத்துள்ள அரிய சீரிய கருத்துக்களைப்பற்றி நாம் அறிந்து கொள்வது அவசியமாகும். அவை நமக்கு நலம் பயக்கத்தக்கவையாகும். அவற்றில் இதோ சில:

"கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே"

"கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு"

"கல்லாத நாளெல்லாம் பிறவா நாளே"

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"

"கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையார்"

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத் - தானும்தன்
பொல்லாச் சிறகை விரித்தா டினாற்போல்
கல்லாதான் கற்ற கவி"

"வெள்ளத்தாற் போகாத, வெந்தணலால் வேகாத,
வேந்தராலும் கொள்ளத்தான் முடியாத
கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாதது
கல்விச்செல்வம்"

"அன்னதானம், ஆடைதானம், இரத்ததானம், கண்தானம் ஆகிய எல்லா தானங்களையும் விடச் சிறந்தது ஞானதானம்"

"அறிவுடையார் எல்லாம் உடையார்அறிவிலார்
என்னுடை யரேனும் இலர்"

"கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு
என்று உற்ற கலை மடந்தை ஓதுகிறாள்"

"கல்வி கரையில; கற்பவர் நாள் சில"

“கற்றாரைக் கற்றாரே காமுறுவர்”

“அரிது அரிது மானிடராதல் அரிது, மானிடராயினும்
கூன், குருடு, பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
கூன், குருடு, பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் செய்தல் அரிது
தானமும் தவமும் செய்த காலையில்
வானவர் நாடு வழி திறந்திடுமே”

இது ஒளவைப் பிராட்டியின் அமுத மொழியும் அருள் வாக்குமாகும்.

கல்வியின் சிறப்பை நன்குணர்ந்துள்ள தமிழன்பர்களின் அறப்பணி

இந்தியாவிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் பெரும்பாலான மக்கள் பொருளாதாரத்தில் பின் தங்கிய நிலையில் இருப்பதாலும், வறுமையினாலும், போதிய வசதியின்மையினாலும் பலர் தங்கள் குழந்தைகளுக்கு அடிப்படைக் கல்வியைக் கூட அளிக்க வாய்ப்பற்றவர்களாக உள்ளார்கள்.

அத்தகையோருக்கு இலவசக் கல்வி அளிக்கும் திட்டத்தை அரசு ஓரளவிற்கு அமல்படுத்தியுள்ள போதிலும், ஆரம்பக் கல்வி புகட்டும் பள்ளிகள் பல கிராமங்களில் இல்லாத நிலையும், ஆரம்பப்பள்ளி இருக்கின்ற இடங்களில் பள்ளிகளில் போதிய வசதிகள் இல்லாத நிலையும் உள்ளன.

குறிப்பாக, நல்ல கட்டிடங்கள், பள்ளிக்குழந்தைகளுக்கு இருக்கை வசதிகள், மேசை, பெஞ்சு, நாற்காலி, கரும்பலகை, எழுதுவதற்குரிய சாதனங்கள், குடிநீர் வசதி, பொது சுகாதார வசதி ஆகியவை போதுமான அளவிற்கு இல்லாத குறைபாடுகள் உள்ளன.

இக்குறைகளை நிவர்த்தி செய்வதற்கு அரசும், உள்நாட்டில் நகரங்களில், கிராமங்களில் உள்ள பொருளாதார வசதி படைத்தவர்கள் கூட மனமுவந்து முன் வருவதில்லை.

தமிழகத்திலுள்ள இளைஞர் பலர் தங்களுடைய கல்வித்தரம், திறமை, கணிணிப்பயிற்சி, இணையதளம் ஆகியவற்றில் சிறந்து உயர்ந்த நிலையில், திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற உன்னத வாக்கிற்கொப்ப உலகில் தலை சிறந்து விளங்கும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு வந்து நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டுள்ளனர். இவர்கள் அமெரிக்காவில் பல இடங்களில் பரவி, விரவி இருந்த போதிலும் மிகப் பெரும்பாலானவர்கள் கலிஃபோர்னியா மாநிலத்திலுள்ள விரிகுடாப் பகுதியில் உள்ளனர். இப்பகுதி சிலிக்கான் பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகிறது. இங்குதான் கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட உயர்தொழில் நுணுக்கங்கள் மிகுந்த பல நிறுவனங்கள் உள்ளன. இவைகளில் பலதரப்பட்ட நிலைகளில் நம்முடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த நண்பர்கள் சிறந்த பணிபுரிகிறார்கள். அவர்களுடைய பணி அமெரிக்கர்களே வியந்து பாராட்டும் வகையில் உள்ளது என்று கூறினால் அது மிகையாகாது.

எல்லா வளங்களும் நலங்களும் நிறைந்து உலகிலேயே மிகச்சிறந்த செல்வச் செழிப்போடு விளங்குகின்ற அமெரிக்காவில் பல வசதி வாய்ப்புகளோடு இருந்தாலும் இவர்களில் பலர் தாங்கள் பிறந்து வளர்ந்த தங்கள் ஊர், தங்கள் பள்ளி, தங்களை

நல்ல நிலைக்கு ஆளாக்கிக் கொண்டு வர வாய்ப்பினை அளித்த சூழ்நிலைகள் ஆகியவற்றை மறக்காமல் நினைவில் கொண்டு, தங்களைப் போல் தங்கள் தமிழ்நாட்டு கிராமப்புறக் குழந்தைகளும் உயரவேண்டும் என்ற பெருவிருப்பினையும், அவாவினையும், புனிதமான நல்லெண்ணத்தையும், அருட்பார்வையையும் கொண்டுள்ளனர்.

அருள்நோக்குக் கொண்ட அவர்களுடைய நல்லெண்ணம் ஈடேறும் பொருட்டு, அவர்களில் சிலர் ஒன்று கூடி TEAM - Team For Educational Activities In Motherland என்ற சேவை அமைப்பினை ஏற்படுத்தியுள்ளனர். இவ்வமைப்பின் உறுப்பினர்கள் மாதந்தோறும் நன்கொடையாக அளிக்கும் தொகையைக் கொண்டு தமிழகத்திலுள்ள பல மாவட்டங்களின் கிராமப்புற ஆரம்பப் பள்ளிகளுக்கு உதவி செய்து வருகின்றனர்.

நம் நாட்டில் மேற்படிப்புப் படித்துவிட்டு மேலை நாடுகளுக்குப் பணிக்குச் செல்வோரைப் பற்றிக் கேலியும் கிண்டலும் செய்வாரும் உண்டு. இளைஞர் பலர் அயல் நாட்டிற்குச் சென்று தங்கள் வசதிகளையும், வாய்ப்புக்களையும் பெருக்கிக் கொண்டு உல்லாசமான வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்களுக்கு நாட்டுப்பற்று என்ற ஒன்று இல்லை. பிறந்த பொன்னாட்டையே மறந்து விடுகிறார்கள். தன்னல நோக்கோடு செயல்படுகிறார்கள். மற்றவர்களை மதிப்பதில்லை, அலட்சியப்படுத்துகிறார்கள் எனப் பழிச் சொல் கூறுவோறும் நம் நாட்டில் உண்டு.

